இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered as a Catholic Weekly (G.P.O. 97) Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360, Main Street, Jaffna, Sri Lanka: Tel: 021-222 2378 Fax : 021 222 9041 -E-mail: editorkavalan@gmail.com ISSN 1391-7633

மலர்: 141 இதழ் : 14 திகதி: 13.08.2017 விலை : 20.00

## மேய்ப்புப் பணி மாநாட்டுத் தீர்மானங்களை அமுல்படுத்த மாரீசன்கூடல் இறைமக்கள் இணக்கம்

மாரீசன்கூடல் புனித கயித்தார் ஆலய மக்களின் வருடாந்தப் பொதுக்கூட்டம் கடந்த 08.08.2017 அன்று நடைபெற்றது.

பங்குத்தந்தை அருட்பணி P.பிராயன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் யாழ். மறை மாவட்டக் குருமுதல்வர் அருட்பணி P.J.ஜெபரட்ணம் அடிகளாரும், இளவாலை மறைக் கோட்ட முதல்வர் அருட்பணி M.யேசுரட்ணம் அடிகளாரும் கலந்து கொண்டார்கள்.

இக்கூட்டத்தின் போது குரு முதல்வர் அவர்களால் கடந்த வருடம் நடைபெற்ற மேய்ப்புப்பணி மாநாட்டில் எமது மறைமாவட்டத்தில் உடனடியாக அமுல்படுத்தப்பட வேண்டிய தீர்மானங்கள் பற்றிய விளக்கம் அளிக்கப்பட்டது.

குறிப்பாக, சில காரணங்களால்ஆலயங்களில்உறுப்பினர்களாக சேர்க்கப்படாமல் இருப்பவர்களை ஆலயத்தில் சேர்த்து அவர்களுக்கு முழு உரிமை வழங்கவேண்டும் என்ற தீர்மானத்தின் அவசியத்தை குருமுதல்வர் எடுத்துக் கூறினார்.

இது பற்றி நீண்டநேரக் கலந்துரையாடலின் பின்னர் இத் தீர்மானத்தின் அவசியத்தை உணர்ந்த ஆலய மக்கள் இதனை ஏற்றுக்கொள்வதாக இணக்கம் தெரிவித்தார்கள்.

இதற்காக அவர்களைப் பாராட்டிய குருமுதல்வர் இறைவனின் விருப்பத்தை, திருச்சபையின் படிப்பினைகளை ஏற்று வாழ்வது இலகுவான காரியமல்ல என்றும்,இதற்குப் பல தியாகங்கள்,விட்டுக் கொடுப்புகள் அவசியம் என்றும் கூறினார்.



எமது மறைமாவட்டத்தின் ஏனைய பல ஆலயத் திருச்சபைகளுக்கு மாரீசன்கூடல் புனித கயித்தார் ஆலய மக்களின் செயற்பாடு ஒரு முன்னுதாரணமாக அமைவது இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியது ஒன்றாகும்.

## யாழ் ஆயர் தலைமையில் கேவலார் திருவிழா

ஜேர்மனியில் வாழும் புலம் பெயர் வாழ் தமிழ் கத்தோலிக்கர்கள் வருடாவருடம்கொண்டாடும்அன்னை மரியாவின் யாத்திரைத் தலமாகிய கேவலார் அன்னையின் திருவிழா ஆகஸ்ட் 13 ஆம் திகதி ஜேர்மனியில் நடைபெறுகிறது.

இத் திருவிழாத் திருப்பலியை யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் தலைமை தாங்கி ஒப்புக் கொடுக்கிறார். பல்லாயிரக் கணக்கான தமிழ் கத்தோலிக்க இறைமக்கள் ஐரோப்பாவின் பல நாடுகளிலுலிருந்து வருகை தந்து அன்னையின் ஆசீரைப் பெற்றுக்கொள்வது வழக்கமாகும்.

இத் திருவிழா ஒழுங்குகளை ஜேர்மன் வாழ் கத்தோலிக்க ஆன்மீக இயக்குநர் அருட்பணி T.நிருபன் நிஷானந் அடிகளார் முன்னின்று ஒழுங்கு செய்துள்ளார்.

## றொரண்டோ ஆயருடன் எமது ஆயர்



கனடா, றொரண்டோ பேராயர் பேரருட்திரு தோமஸ் கருதினால் கொலின்ஸ் அவர்களை எமது ஆயர் பேரருட்திரு யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் கனடாவில் கடந்த மாதம் சந்தித்தார்.

இச் சந்திப்பின் போது கனடா வாழ் புலம்பெயர் தமிழ் கத்தோலிக்க மக்களின் ஆன்மீகப் பணிகள் தொடர்பாக இரு ஆயர்களும் கலந்தாலோசித்தனர்.

## புதிய அதிபர்கள் நியமனம்



அருட்பணி இ.கொட்விறி ஜோயேல் அதிபர் - தூய ஹென்றி அரசர் கல்லூரி



அருட்பணி றொபின்சன் ஜோசப் புதுக்குடியிருப்பு றோ.க.த.வித்தி

யாழ். மறை மாவட்டத்தில் உள்ள கத்தோலிக்க பாடசாலைகள் இரண்டிற்கு புதிய அதிபர்கள் நிமிக்கப்பட்டுள்ளனர். இளவாலை தூய ஹென்றி அரசர் கல்லூரியின் புதிய அதிபராக அமலமரித் தியாகிகள் சபையினைச் சேர்ந்த அருட்பணி இம்மனுவல் கொட்விறி ஜோயேல் அடிகளார் கடந்த ஆகஸ்ட் முதலாம் திகதி முதல் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

கல்லூரி அதிபராகப் பணியாற்றிய அருட்பணி ஜேசுதாஸ் அடிகளார் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்தே புதிய அதிபர் நியமனம் வழங்கப்பட்டது.

முல்லைமாவட்டம் புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் புதிய அதிபராக யாழ். மறை மாவட்டக் குரு அருட்பணி அ.றொபின்சன் ஜோசப் அடிகளார் யாழ். ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க கல்வித் திணைக்கத்தினால் இந் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இப்பாடசாலைக்கு குருவானவர் அதிபராகப் பொறுப்பேற்பது இதுவே முதற்தடவையாகும்.

புதிய அதிபர்களின் கல்விப் பணி சிறக்க பாதுகாவலன் இறையாசீருடன் வாழ்த்தி மகிழ்கின்றது.

## இளையோர் ஆணைக்குழுவின் புதிய இயக்குநராக அருட்பணி A.அன்ரன் ஸ்ரீபன் அடிகள்

யாழ். மறைமாவட்ட ஆயர் அவர்களின் பணிப்பின் பேரில் இளையோர் ஆணைக்குழுவின் புதிய இயக்குநராக அருட்பணி யு.அன்ரன் ஸ்ரீபன் அடிகளார் 30.08.2017 அன்று உத்தியோகபூர்வமாக பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டார்.

கடந்த 08 ஆண்டுகளுக்கு மேலாக இளையோர் ஆணைக்குழுவின் இயக்குநராகக் கடமையாற்றிய அருட்பணி M.V.E.ரவிச்சந்திரன் அடிகளார் மறைமாவட்ட இளையோர் ஒன்றியத்தின் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புள்ள சேவையாற்றி ஒரு உயர்ந்த நிலைக்கு இளையோர் ஒன்றியத்தை இட்டுச் சென்றுள்ளார் என்றால் அது மிகையாகாது.

பல சவால்கள் மத்தியில் மறைமாவட்ட இளையோரின் வளர்ச்சிக்கு உழைத்த அடிகளார் தன்னுடைய பணிக்காலத்தில் தன்னுடன் இணைந்து பணியாற்றிய இளையோர் ஒன்றிய அங்கத்தவர்கள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் முன்னிலையில் தனது பொறுப்புக்களைப் புதிய இயக்குனரிடம் ஒப்படைத்தார்.

இயக்குனர் அருட்பணி ரவிச்சந்திரன் அடிகளாருக்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு புதிய இயக்குநர் அருட்பணி ஸ்ரீபன் அடிகளாரை மகிழ்ச்சியுடன் வரவேற்றுக் கொள்கின்றது யாழ். மறைமாவட்ட இளையோர் ஒன்றியம்.

## கொக்கிளாய்ப் பங்கு "ஒப்புரவின் பங்காக" வாழ வாழ்த்துகின்றேன்

### யாழ். குருமுதல்வர்

கொக்கிளாய்ப் பங்கிற்குப் புதிய பங்குத்தந்தையாக அருட்பணி ஜீவன தாஸ் பெர்னாண்டோ அமதி அடிகளாரை யாழ். ஆயர் நியமித்துள்ளார்.

குருமுதல்வர் அருட்பணி P.J.ஜெபரட்ணம் அடிகளார் புதிய பங்குத்தந்தையின் பங்குப் பொறுப்பேற்பு நிகழ்வில் கலந்து கொண்டு திருப்பலி ஒப்புக் கொடுத்தார்.

இந்நிகழ்வின்போது யாழ். மறைமாவட்டத்தில் இரு சகோதர மொழி பேசும் கத்தோலிக்கர் வாழும் பங்காக கொக்கிளாய் திகழ்வதினால் இன சகோதர இனங்களுக்கிடையே ஒப்புரவின் பங்காக இப் பங்கு வாழ வேண்டும் மற்றும் இனங்களுக்கிடையே புரிந்துணர்வும் நல்லிணக்கமும் ஒன்றுபட இப் பங்குத் திருச்சபை உழைக்க வேண்டும் எனவும் இத் திருப்பலியில் வேண்டினார்.

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா:127:1)

## எமது எண்ணம்

### சுயமரியாதையைக் காப்பாற்ற ஒன்றிணையுங்கள்

தேசிய விடுதலை வேண்டி நிற்கும் இனம் ஒன்று சமூகக் கட்டுக்கோப்பைப் பேணவேண்டியது பிரதான மாகும். சமூகக்கட்டுக்கோப்பைப் பேணுவதும் கண்காணிப் பதும் ஒவ்வொரு பொதுமகனுக்கும் உள்ள பொறுப்பு. ஆகவே போரினால் பாதிக்கப்பட்டுமாற்று வழி ஒன்றைத் தேடிக்கொண்டிருக்கும் காலகட்டத்தில் சமூகச் சீரழிவுகள், பிரதான அரசியல் கோரிக்கையின் முக்கியத்துவத்தை அழித்துவிடும் என்பதை எல்லோரும் எச்சரிக்கையுடன் உணர்ந்து கொள்ளவேண்டும்.

வடக்குக் கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக யாழ்ப் பாணத்தில் வாள்வெட்டுக்களும் அடிதடி சண்டைகளும் நாளுக்கு நாள் அதிகரித்துள்ளன. இதற்கு இரண்டுகார ணங்களைக் கூறலாம். ஒன்று இயல்பாகவே சமூகத் தில் உள்ள ஊர்ச் சண்டியர்கள் மற்றும் குடும்ப வன் முறைகள். இரண்டாவது வெளிச் சக்திகளினால் திட்டமிடப் பட்டு இயக்கப்படும் குழுக்கள்.

இங்கே இரண்டாவதாக உள்ள குழுக்கள் தொடர் பாக மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும். அதாவது அரசி யல் கோரிக்கையை மலினப்படுத்தவும் மீண்டும் பயங்கர வாதம் அது இது என்று கதைசொல்லி அஹிம்சை வழி யிலான மக்களின் தற்போதைய போராட்டங்களைக் குழப் பவும் சர்வதேச ஆதரவைத் திசைதிருப்பவும் இந்தக் குழுக் கள் மூலமான வன்முறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

ஆகவே வெளிச் சக்திகளினால் இயக்கப்படும் அந்தக் குழுக்கள் பற்றிய விழிப்புணர்வுகள் மக்களுக்கு வழங்கப்படவேண்டும்.

அதற்கு அரசியல் கட்சிகள் பொது அமைப்புகள், பொதுநிலையினர் ஆகியோரின் பங்களிப்பு அவசியமாகும். அதேவேளை ஊர்ச் சண்டியர்களின் வாள்வெட்டுக்கள், குடும்பவன்முறைகள் போன்றவற்றை அந்தந்த பிரதேச மக்கள் கவனத்தில் எடுக்கவேண்டும். இளையவர்கள் தான் குழு மோதல்களில் ஈடுபடுகின்றனர்.

சிலவேளை அவ்வாறான குழு மோதல்களைச் சில வெளிச் சக்திகள் தூண்டிவிடுகின்ற சம்பவங்கள் அல்லது பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகளை பதிவுசெய்ய மறுக்கப்படும் காரணங்களினால் அந்த மோதல்களைத் தடுக்க முடியாமல் போகின்றன.

எனவேதான் பெற்றோர், ஆசிரியர்கள், சமூகத்தில் உள்ள பெரியவர்கள் ஒன்று சேர்ந்து இளையவர்களின் நடத்தை தொடர்பாகக் கவனம் செலுத்தவேண்டும். போர் ஒன்று நடைபெற்று அரசியல் தீர்வும் உரியமுறையில் முன்வைக்கப்படாத ஒரு சூழலில் சமூகத்தில் அமைதியைக் குழப்புவது இலகுவானது. குறிப்பாக மக்கள் மத்தியில் இருக்கும் விரக்தி, ஏக்கம், பொருளாதாரப் பிரச்சினைகள் போன்ற பலவீனங்களை மையமாக வைத்துச் சில வெளிச் சக்திகள் உள்ளேபுகுந்து ஈழத்தமிழர்களின் சுயமரியாதைக் குக் களங்கம் ஏற்படுத்துகின்றன. அத்துடன் முன்னாள் போராளிகள் மீதும் குற்றம் சுமத்தி 30 ஆண்டுகால போராட்டத்தை மாசுபடுத்தவும் முற்படுகின்றனர்.

எனவே இவ்வாறான செயற்பாடுகள் மூலம் அரசி யல் கோரிக்கையின் மதிப்பைக் கொச்சைப்படுத்தி மலினப் படுத்தினால், வடக்குக் கிழக்கில் தாங்கள் நினைத்ததைச் சாதிக்க முடியுமென அந்த வெளிச் சக்திகள் நம்புகின்றன. ஆனால் பட்டறிவுள்ள தமிழ்ச் சமூகம் அவ்வாறான இழி நிலைக்கு இடமளிக்காது என்ற உறுதியான மனத்தைரி யத்தை அந்த வெளிச் சக்திகளுக்கு இடித்துரைக்க வேண் டும். மக்களின் ஜனநாயக வழியிலான போராட்டங்களைக் குழப்பவும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தற்போதைய சாதக மான நிலையை திசைதிருப்பவும் திட்டமிட்டு செயற்படும் அந்த தீய சக்திகள் யார் என்பது மக்களுக்குத் தெரியாத தல்ல. ஆகவே சமூகத்தில் உள்ள ஒவ்வொரு பொதுமக னும் ஒன்று சேர்ந்தால் நிச்சயம் தமிழர்களின் சுயமரியா தையைக் காப்பாற்ற முடியும்.

போரினால் நொந்து போயுள்ள சமூகத்தில் பல வீனங்கள், குழப்பங்கள் இருக்கத்தான் செய்யும். ஆனால் அதனை வெளிச்சக்திகள் பயன்படுத்தி பிரதான அரசியல் உரிமைக் கோரிக்கைக்குக் குந்தகம் ஏற்படுத்த இடமளிக்கக் கூடாது என்பதில் உறுதிபூணுவோம்.

அருட்பணி.எஸ்.எமின்சிலி றொஷான்

## தூய யாகப்பர் ஆலயத் திருவிழாவை முன்னிட்டு மூன்று நாட்கள் கலைவிழா

யூலை மாதம் 25ஆம் திகதி இடம்பெற்ற குருநகர் தூய யாகப்பர் ஆலயத் திருவிழாவை முன்னிட்டு குருநகர் கலையரங்கில் 28, 29,30 ஆகிய தினங்களில் மாலை வேளையில் வெவ்வேறு கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

முதல்நாள் நிகழ்வில் சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலை மாணவிகளின் நடனம், சென் ஜேம்ஸ் மகாவித்தியாலய மாணவர்களின் கோவலன் கண்ணகி நாடகம் மற்றும் யாழ். மறை மாவட்டக் குருக்கள் வழங்கிய "மறைகாத்த மாவீரன்" என்னும் தூய யோசவ் வாஸ் முனிவரின் வரலாறு சொல்லும் நாட்டுக்கூத்து என்பன இடம்பெற்றன.

இரண்டாம் நாள் நிகழ்வாக யாழ். மறை மாவட்டக் கத்தோலிக்க ஒன்றியத்தின் விடியல் பாடல்குழுவினர் வழங்கிய இன்னிசை மாலை நிகழ்வு இடம்பெற்றது.

மூன்றாம் நாள் நிகழ்வில் குருநகர் இளையோர் கலையகம் வழங்கிய "சென் றோக்" என்னும் நாட்டுக் கூத்தும் வேறு சில நாடகங்களும் இடம்பெற்றன.

புனிதரின் திருவிழாவை கலைவெளிப் பாடுகள் வழியாகக் கொண்டாடிய இந்நிகழ் வில் பலரும் கலந்து பயன் பெற்றனர்.

## 70 ஆவது தேசிய கத்தோலிக்க இளையோர் ஒன்றுகூடல்



70 ஆவது தேசிய கத்தோலிக்க இளையோர் ஒன்றுகூடல் காலி மறைமாவட்டத்தில் ஆடி மாதம் 6, 7, 8 ஆம் திகதிகளில் சிறப்பாக நடை பெற்றது.

தேசிய கத்தோலிக்க இளையோர்ஒன் றியத்திற்குப் பொறுப்பாகவுள்ள யாழ். மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு யஸ்ரின் ஞானப்பிர காசம் மற்றும் காலி மறை மாவட்ட ஆயர் அதி வணக்கத்துக்குரிய ரேமன் விக்ரமசிங்க மற்றும் தேசிய மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழுக்களின் இயக்குநர்கள் தலைமை யில் இடம்பெற்றது. இம்முறை "சைபர் முறைத் தாக்குதலும் அதனை எவ்வாறு நகர்தலும்" என்னும் தொனிப்பொருளில் அமர்வுகள் நடைபெற்றது.

யாழ். மறைமாவட்டத்தைப் பிரதிநிதித் துவப்படுத்தி யாழ். மறை மாவட்ட இளையோர் ஒன்றிய செயற்குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

71 ஆவது தேசிய இளையோர் ஒன்று கூடல் மன்னார் மறைமாவட்டத்தில் இடம்பெற வுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அடுத்த ஆசிய இளையோர் நாள் 2020 இல் இந்தியாவில்

அடுத்த ஆசிய இளையோர் நாள் 2020ம் ஆண்டில், இந்தியாவில் நடைபெறும் என, ஆசிய ஆயர் பேரவைகள் கூட்டமைப்பின் தலைவரான கர்தினால், ஆசுவால்டு கிரேசியஸ் அவர்கள் அறிவித்துள்ளார்.

இந்தோனேசியநாட்டின் யோக்யகார்த் தாவில் நடைபெற்ற 7வது ஆசிய இளையோர் நாளின் நிறைவுத் திருப்பலியைதலைமை யேற்று நிறைவேற்றிய, மும்பைப் பேராயர் கர்தி னால் கிரேசியஸ் அவர்கள், இத்திருப்பலியின் இறுதியில் 8 ஆவது ஆசிய இளையோர் நான் 2020ம் ஆண்டில் இந்தியாவில் நடைபெறும் என அறிவித்தார்.

ஆகஸ்ட் 06 ஆம் திகதி நடைபெற்ற இத்திருப்பலியில் கர்தினால் கிரேசியஸ் இந்தியத் திருஅவையின் சில அதிகாரிகள் மற்றும் சில இந்திய இளையோர் பிரதிநிதிகள் மூங்கிலால் எளிமையாகச் செய்யப்பட்ட ஆசிய இளையோர் நாள் சிலுவையை இந்தோனேசிய இளையோரிடமிருந்துபெற்றனர்.

இரண்டு மூன்று அல்லது ஐந்து ஆண்டுகள் இடைவெளியில் சிறப்பிக்கப்படும் ஆசிய இளையோர் நாள் முதன் முதலில் 1999ம் ஆண்டில் தாய்லாந்தின் ஹுவா ஹின் நகரில் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து இந்நாள் தாய்வானின் தாய்பேய் நகரில் 2001ம் ஆண்டிலும் இந்தியாவின் பெங்களூ ரில் 2003ம் ஆண்டிலும் நடைபெற்றது. 2006ம் ஆண்டில் ஹாங்காங்கிலும் 2009ம் ஆண்டில் பிலிப்பீன்சிலும் 2014ம் ஆண்டில் தென் கொரியாவிலும் ஆசிய இளையோர் நாள் சிறப்பிக்கப்பட்டது.

யோக்யகார்த்தாவில் ஆகஸ்ட் 2ம் திகதி ஆரம்பித்த 7வது ஆசிய இளையோர் நாள் ஆகஸ்ட் 6ம் திகதியோடு நிறைவடைந்தது. இந்நிகழ்வில் 6 கர்தினால்கள் 52 ஆயர்கள் 158 அருள்பணியாளர்கள் 41 இருபால் துற வியர் உட்பட இரண்டாயிரத்திற்கு மேற் பட்ட இளையோர் 21 ஆசிய நாடுகளிலி ருந்து கலந்து கொண்டனர்.

# புலம்பெயர்ந்தோர் வேலைவாய்ப்புக்கான விழிப்பூட்டல் கருத்தமர்வுச் செயற்பாடு



வெளிநாடுகளுக்கு வேலை வாய்ப்புக்காக செல்பவர்கள் எதிர்கொள்ளும் சவால்களும், வெளிநாடு செல்வோரின் குடும்பங்களில் ஏற்படும் விபரீதங்களில் இருந்து மீழ விழிப்புணர்வு மேற்கொள்ள கரித்தாஸ் நிறுவனத்தின் முயற்சிகள் 10 வருடங்களுக்கு மேலாக இலங்கைபூராகவும் மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்திட்டத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் கரித்தாஸ் நிறுவனத்துடன் இணைந்து செயற்படுவது எமது முயற்சிகளுக்குப் பலமாக அமைந்துள்ளது, என கியூடெக் கரித்தாஸ் நிறுவன இயக்குனர் அருட்பணி யூஜின் பிரான்சிஸ் தலைமையில் நடைபெற்றவிழிப் புணர்வுக் கருத்தரங்கில் தேசியகரித்தாஸ் செடேக் நிறுவன இச் செயற்திட்ட இணைப்பாளர் அருட்சகோதரி துசாரி தெரிவித்தார்.

ஐந்து பிரதேச செயலக அரச உத்தியோகத்தர்களுடன், வெளிநாடுகள் சென்று வந்தோர், சமூகப்பணியாளர்கள், கள உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

இக் கருத்தமர்வில், வளவாளராக அரச வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக நிர்வாக உத்தியோகத்தர் திரு.ஜெயனந்தன், கரித்தாஸ் நிர்வாகப் பணியாளர் செல்வி.லக்சா, கள உத்தியோகத்தர் திருமதி. மேரிலலிதா ஆகியோரின் வழிகாட்டலுடன் பலரது அனுபவப் பகிர்வுகள் பகிரப்பட்டன.

இப்பயிற்சியின் உண்மைத் தன்மைகள் உணர்த்தப்பட்டதுடன் இயக்குனர் தமது உரையில் கரித்தாஸ் நிறுவனத்தின் இப்பணி லெபனானில் ஏற்பட்ட புலம்பெயர்ந்த பணியாளர்களின் நெருக்கீடுகளை உணர்ந்து இலங்கைக்கு அழைத்து வருவதில் வெற்றி கண்டதுடன் அவர்களின் இன்னல் அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டார்.

குடும்பசிதைவுடன், சமூகச் சீரழிவுகளிலும் இருந்து பாதுகாக்கும் வழிகளை உணர்த்தும் விழிப்புணர்வாய் அமைந்தது.

# தூய செபமாலை அன்னை ஆலய வருடாந்தத் திருவிழா – 2017




வலைஞர்மடம் தூய செபமாலை மாதா ஆலய வருடாந்த திருவிழா 27.08.2017 ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

தினமும் மாலை 5.00 மணிக்கு நவநாள் வழிபாடு இடம்பெறும். 26.08.2017 சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு திருப்பலியும், அதனைத் தொடர்ந்து நற்கருணை வழிபாடும் இடம்பெறும்.

ஞாயிற்றுக்கிழமை 27.08.2017 காலை 7.00 மணிக்கு திருநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இத் திருப்பலியில் அனைவரும் பங்குகொண்டு அன்னையின் ஆசீர்பெற அன்புடன் அழைக்கின்றோம்.

# "பரிவீர மறைபோதன்" இறுவட்டு வெளியீடு.



இளவாலை புனித யாகப்பர் ஆலயத் திருவிழாவில் இடம்பெறும் புனிதரின் பவனி உலாவின் போது இவ் ஆலய முன்னோர்களால் வாய்மொழியாகப் பாடப்பட்ட புனித யாகப்பர் புகழிசை ஆவணத் தொகுப்பானது சமகால எம் ஆலயக் கலைஞர்களாலும், பிறகலைஞர்களாலும் பாடப்பட்டு இறுவட்டு வடிவில் தயாரிக்கப்பட்டது.

இவ் வெளியீடானது இத்தாலியில் வசிக்கும் பங்குமகன் திரு.D.C.ஆனந்தராஜா அவர்களின் அயராத முயற்சியினாலும், முழுமையான பங்களிப்பினாலும் தயாரிக்கப்பட்டு இசைத்தென்றல் திரு.ம.யேசுதாசன் அவர்களின் இசைக்கோர்ப்பினால்மெருகூட்டப்பட்டு சப்தமி கலையகத்தினால் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, 25.07.2017 அன்று இடம்பெற்ற வருடாந்த ஆலயத் திருவிழாவின் நிறைவில் யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி. கலாநிதி P.J.ஜெபரட்ணம் அவர்களால் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்நிகழ்விற்கான தலைமையுரையினை பங்கின் முதல்குரு அருட்பணி. S. டேமியன் (அமதி) அவர்களும், ஆசியுரையினைப் பங்குத்தந்தை அருட்பணி. ஆ. யேசுரட்ணம் அவர்களும், ஆய்வுரையினை முன்னாள் பங்குத்தந்தை அருட்பணி. C.J.அன்ரனி பாலா அவர்களும் வழங்கிச் சிறப்பித்தனர். முற்றுமுழுதாகக் கர்நாடக இசையில் உருவாக்கப்பட்டுப் பாடப்பட்டதே இதன் சிறப்பம்சமாகும்.

(சென்ற இதழின் தொடர்ச்சி)

அதாவது எமது எண்ணங்களும் வார்த்தைகளும் செயல்களும் வல்லமையுடையவை. அவைகளுக்கு என்றுமே அழிவில்லை.

ஆன்மாவின் அடியாழத்திலிருந்து (புத்தி, சித்தம்) பிறப்பெடுப்பதால் இவற்றை நெறிப்படுத்தினால் மட்டுமே சரியான பாதையில் செல்ல முடியும். மனிதன் இறைவிருப்பப்படி புனிதனாகமுடியும். ஏனெனில் இந்த மூன்றினாலும் எதையும் ஆக்கவும் அழிக்கவும் முடியும். இங்குள்ள சிறியதோர் சிம்காட் பல லட்சம் கிலோ மீட்டர்களுக்கப்பால் எமது சொல், செயல், சிந்தனையைக் காவிக் கொண்டு சென்று அங்குள்ள வேறொரு சிம்காட்டில் பதித்து இறைசாயலான மனிதனுக்கு வெறும் இலக்கமொன்றைக் குத்திப்புலன்களுக்கு விருந்தளிக்கின்றன. "உனது இலக்கமென்ன? சொல்லு." இதுதான் இன்றைய கேள்வி. மேலும் பொதுவாக உலகை இன்று இயக்குகின்ற 666 என்னும் "எண்ணைக் குறியாக இட்டுக்கொள்ளாத எவராலும் விற்கவோ வாங்கவோ முடியவில்லை"(திவெ 13:17). "அல்லும் பகலும் ஓய்வே இராது"(திவெ 14:11). நேரத்தைப்படைத்த இறைவனுக்குக் கொடுக்கநேரமில்லாதவாறுமுழுமனித குலத்தையே இந்த வலைப் பின்னலே ஆட்டிப்படைத்து பரபரப்பாகவும் அவசர மிக்கதாகவும் ஆக்கிவிட்டது. நல்லது கெட்டது எதுவென்று உணர முடியாத பதின்மவயதினர் தமது புலன்களூடாக சாத்தானை வீடுகளுக்குள்ளே வரவிட்டுப் பரபரப்பாக ஆகிவிடுகின்றனர். தம்மைப் படைத்த, மீட்ட இறைவனுக்குக் கொடுக்க நேரமில்லை. இரத்தம் சிந்தி திருமுழுக்கினால் கழுவித் தூய்மைப்படுத்தித் தமக்குச் சொந்தமாக்கிக் கொண்ட இயேசுவாகிய வார்த்தையை வாசித்துத் தியானித்துச் செபிக்க, அவரோடு அமர்ந்திருக்க நேரமில்லை. ஓடிக்கொண்டே, தேடிக் கொண்டே இருக்கிறார்கள். நின்று நிதானமாகச் சிந்தித்து ஆன்ம சோதனை செய்ய ஏதோ ஒரு சக்தி விடவில்லை. ஏனெனில் "அந்த மரம் உண்பதற்குச் சுவையானதாகவும் கண்களுக்குக் களிப்பூட்டுவதாகவும் அறிவு பெறுவதற்கு விரும்பத்தக்கதாகவும்" (தொநூ 3:6) இருப்பதால் அம்மரத்தின் கனியைப் பறித்துத் தாமும் உண்கிறார்கள். மற்றவர்களுக்கும் கொடுக்கிறார்கள். மேலும்தற்காலடிஜிற்றல்வாகனங்களூடாகக் கொடூரவிபத்துக்களையும் லீசிங் கட்டமுடியாத தற்கொலைகளையும் காண்கிறோம். ஏனெனில் ஐம்புலன்களை இம்மரத்தின் கனிகள் ஆட்கொள்ளும்போதுஊனியல்பின்இச்சைகளுக்கு அடிமைகளாகி, தூய ஆவியாரின் கொடைகள் மழுங்கடிக்கப்பட்டு அவரது கனிகளைத் தாமும் உண்டு, அயலவருக்கும் கொடுக்க முடியாமல் இருக்கின்றார்கள். மேலும் உலக நவீனத்துவத்தின் பாற்பட்ட சமூக மதிப்பீடுகளுடன் இணைந்து செல்லவேண்டிய கட்டாயத்தால் (நற்செய்தி மதிப்பீகளூடாக உலக மதிப்பீடுகளைத் தூய்மைப்படுத்த முடியாத கையாலாகாத் தன்மையுடன்) கத்தோலிக்கக் குருக்கள் துறவியர்களின் வழிநடத்தலில் இயங்கும் பாடசாலைகளில்கூடச் சமயச் சூழலற்ற கொம்யூனிச நிலையில் எம்மதமும் சம்மதம், எச்சபையும் திருச்சபை என்னும் விட்டுக்கொடுப்புகளால் கத்தோலிக்க ஒழுக்க நெறிகள் நசுக்கப்பட்டு தேவ அழைத்தல்கள் கேள்விக்குறியாகின்றன.

## யாழ். மறைமாவட்டத் திருச்சபைக்காக மன்றாடுவோம்

எனவே யாழ். திருச்சபையின் ஆன்ம வழிகாட்டிகளாகிய நமது வழிநடத்தலும் நெறிப்படுத்தலும் இன்றைய சமூகத்திற்கு, எதிர்காலத்திருச்சபைக்குத் தேவை என்பதை ஆழமாக உணரும்நாம், குடிவெறி, போதைப்பொருள் பாவனை, பழிவாங்கும் வாள்வெட்டுப் பண்பாடு, வன்புணர்வுச் சீர்கேடு போன்றவைகளில் இருந்து எமது மக்களைத் தூய்மைப்படுத்த ஆன்மீகத் தலைவர்களாகிய நாம் முதலில் எமது நம்பிக்கையைப் பலப்படுத்தி, மக்களின் நம்பிக்கைக்கு உரமிடுவோம். செபக் குழுக்களையும் அன்பியவாழ்வையும் ஆலயங்கள்தோறும் கட்டியெழுப்புவோம். தன் வாழ்வின் தடைகளை நன்மைக்கான இறைபராமரிப்பின் சந்தர்ப்பங்களாக ஏற்று "இறையருளால் முடியும்" என்றெண்ணிப்பணியாற்றிய எம் புனிதர் யோசவ் வாஸ் அடிகளைப் பின்பற்றிஎமதுவாழ்வையும்தோழமையின் ஒன்றுகூடல்களையும் இறைமணங்கமழும் முன்னுதாரணங்களாக மாற்றுவோம்.

தனிச்செபத்திற்கும், குடும்பச் செபத்திற்கும், குழுச் செபத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்த புனிதரைப் பின்பற்றி செபத்தின்வழி காட்டிகளாக மாறுவோம்.

"தூயதந்தையே! நாம் ஒன்றாய் இருப்பது போல் - அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக" (யோவா 17:11,21) என்ற இயேசுவின் செபத்திற்கு அர்த்தம் கொடுக்கும் வகையில் செபிப்போம் சிந்திப்போம்ஒன்று சேர்ந்து செயற்படுவோம். புதுப்பித்துப் பகிர்ந்து புதிதாய் வாழ்வோம்.

அருட்பணி .C.J.அன்ரனிபாலா

## புனித ஜோசவ் வாஸ்

### வாழ்க்கைப் பதிவுச் சுவடிகளிலிருந்து......



இலங்கைத் தீவின் மேற்குப் பகுதியின் மிகப் பரந்த ஒல்லாந்த அளுகைக்குட்பட்ட பிரதேசத்தில் பேராபத்தை அறிந்த நிலையிலும் புனித யோசவ் வாஸ் ஒரு நீண்ட மறைத்தூதுப் பணிப் பயணத்தைத் துணிவுடன் மேற்கொண்டிருந்தார்.

இலங்கைக்கான ஒல்லாந்த அரசாங்கக் கம்பனியின் சிம்மாசனமாக விளங்கிய கொழும்பு நகருள் சலவைத் தொழில் செய்யும் பெண்வேடம் தரித்து நுழைந்தார் யோசவ் வாஸ் அடிகள்.

போர்த்துக்கேய ஆட்சிக் காலத்தில் லிவறமென்ரோ மாதா எனும் பெயருடன் கொழும்பின் சுற்றுப் புறநகர்ப் பகுதியில் தேவமாதாவுக்கு ஒரு அற்புதமான தேவாலயம் இருந்தது. அங்கே ஒரு கிணறும் இருந்தது. கிறிஸ்த வரல்லாத சிங்களவர்களும் புதுமைமிக்க அவ்விடத்தை மிகுந்த பக்திப் பற்றுதலுடன் அண்டி வருவதுண்டு.

நோயுற்றோர் அக்கிணற்றின் நீரைப் பெற்று வந்தனர். சலவைப் பெண்ணாக வேடம் பூண்ட புனித ஜோசவ் வாஸ் அடிகள் அக்கிணற்றடியில் உடைகளைக் கழுவிக் கொண்டிருப்பார். பகலில் சலவைப் பெண்ணாகவும், இரவில் மக்களிடமிருந்து தன்னை அடையாளப்படுத்தாமல் மக்களுக்கான ஆன்மீகக் கடமைகளையும் அப்பகுதியில் ஆற்றி வந்தார்.

இத்தகைய பக்தி முயற்சி, மக்களிடையே பரவாமல் இருக்க ஒல்லாந்தர் அந்த மரியன்னையின் ஆலயத்தை நிர்மூலமாக்கிய போதும், அவர்களால் அப்பக்தி முயற்சியை நிறுத்த முடியவில்லை.

புனித ஜோசவ் வாஸ் அங்கிருந்தவர்களிடம் சலவைப் பெண் வேடத்தில் உரையாடி சவர்க்காரப் பெட்டிக்குள்ளே நற்கருணையை வைத்து அங்குள்ள மூப்பர்களிடம் மறைவாயிருக்கும் கத்தோலிக்கர்களுக்கு வழங்குமாறு கொடுத்து வந்தார்.

அச் சலவைப் பெண் கிறிஸ்தவர் தூய்மையடைந்த அவர்களுடைய ஆன்மாவையும் தொடர்ந்து தூய்மையில் பாதுகாத்து நின்றாள். கிணற்றின் நீரைத் தேடி வந்தவர்களுக்கு புனித ஜோசவ் வாஸ் என்ற சலவைப் பெண் பாவசங்கீர்த்தனத்தின் மூலம் தூய்மைப்படுத்தும் நீரையும் அவர்களின் ஆன்மாவில் ஊற்றிக் கழுவி வந்தாள்.

*அருட்பணி றொமொல்டோ றொபின் றொட்றிக்கஸ் அடிகளாரின் "தூய ஜோசவ் வாஸ் அடிகளாரின் 207 கதைகள்" எனும் ஆங்கில நூலிலிருந்து 77 ஆவது கதை தமிழில் அருட்பணி அருள்தாசன் அடிகள்*




- ஐக்கிய அரபு குடியரசிலுள்ள ஒரு மசூதிக்கு மரியன்னையின் பெயரைச் சூட்டுவதற்கு அந்நாடு தீர்மானித்திருப்பது, கிறிஸ்தவர்களுடன் இஸ்லாமியர்கள் கொண்டிருக்கும் நல்லுறவின் அடையாளமாக உள்ளது என அரேபியாவின் தென்பகுதி வத்திக்கான் பிரதிநிதி ஆயர் பால் ஹன்டர் கூறினார்.
- உண்மைகளைத் திரித்துக் கூறும் செய்திகளுக்கு ஆதரவளிப்பது, அவற்றைப் பரப்புவது மற்றும் அச்செய்திகளுக்கு ஊக்கம் கொடுப்பதைத் கத்தோலிக்கர்கள் தவிர்க்குமாறும், இத்தகைய செய்திகள் பரப்பப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்குமாறும் பிலிப்பைன்ஸ் ஆயர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.
- உதவி தேவைப்படும் ஏறக்குறைய 5000 குடும்பங்களுக்கு ஜோர்டான் கரித்தாஸ் அமைப்பு ஒவ்வொரு நாளும் உணவுப் பொட்டலங்கள் அளித்து வருகிறது.
- வரும் செப்ரெம்பர் 06 முதல் 11 ஆம் திகதி வரை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கொலம்பிய நாட்டிற்குத் திருப் பயணம் மேற்கொள்கிறார்.
- போதைப்பொருள் சந்தையை ஊக்குவிக்கும் கும்பல்களால் போதைப் பொருள் வியாபாரம் தேசிய அளவிலும், உலக நாடுகளின் எல்லைகளுக்கு இடையேயும் ஒடுக்க முடியாததாக விரிந்து வளர்வதாக கர்தினால் பீட்டர் டர்க்சன் கவலை தெரிவித்துள்ளார்.
- 2018 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம், வத்திக்கானில் நடை பெறவுள்ள 15 ஆவது உலக ஆயர்கள் மாமன்றத்தின் தலைப்பு "இளை யோர், நம்பிக்கை,, அழைப்பைத் தேர்ந்து தெளிதல்" என்பதாகும்.
- நாடுகளிடையே நிலவும் கருத்து வேறுபாடுகளைத் தீர்க்க ஆயுதங்களை நம்புவதை விடுத்து பேச்சு வார்த்தைகளை நம்புவதற்கு அனைத்து அரசுகளும் முயற்சிகள் எடுக்கவேண்டும் என்று பேராயர் அவசர வேண்டுகோள் விடுத்தார்.
- இவ்வாண்டு நடைபெறுவதாய் திட்டமிடப்பட்டிருந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் பங்களாதேஷ் மற்றும் இந்தியாவுக்கான திருப்பணம், அடுத்த ஆண்டிற்குத் தள்ளிவைக்கப்படக் கூடும் என மும்பைப் பேராயர் கர்தினால் ஆஸ்வால்டு கிரேசியஸ் தெரிவித்துள்ளார்.
- இன்றைய உலகில் 2 கோடிக்கு மேற்பட்டோர் நவீன அடிமைத்தனத்தில் சிக்கியுள்ளனர் என்றும், இது மனிதக் குடும்பத்தின் முகத்தில் மிகவும் வெட்கத்துக்குரிய அடையாளத்தைப் பதிக்கிறது என்றும், பிரித்தானியாவின் வெஸ்ட்மின்ஸ்டர் கர்தினால் வின்சென்ட் நிக்கோல்ஸ் குறிப்பிட்டார்.

# திருமறைக் கலாமன்றத்தின் "வாழ்வு தந்த வாஸ்"

புனித யோசவ் வாஸின்ஆண்டினை முன்னிட்டு யாழ் திருமறைக் கலாமன்றம் கடந்த 26,27 ஆம் திகதிகளில் 'வாழ்வு தந்த வாஸ்' என்னும் வரலாற்று நாடகத்தினை மேடையேற்றிப் பலரது பாராட்டுக்களையும் பெற்றுக்கொண்டது. அந்நாடகம் பற்றி அருட்திரு J.E.ஜெயசீலன் அடிகள் தேவதாயின் குரல் ஏட்டில் எழுதிய குறிப்புக்கள் இங்கு மீள் பிரசுரமாகின்றன.

திருமறைக் கலாமன்றம் கடந்த மாதம் 26,27 ஆம் திகதிகளில் மேடையேற்றிய 'வாழ்வு தந்த வாஸ்' என்ற வரலாற்று நாடகம்.அதன் நெறியாளர் யோ.யோண்சன் ராஜ் குமார் அவர்களின் முன்னைய திருப்பாடுகளின் காட்சிகளை ஒரு படி மிஞ்சி விட்டது.

யோசவ் வாஸாக நடித்த யஸ்ரின் ஜெலூட்டின் தகுந்த பாத்திரப் படைப்பும் நடிப்பும். ஏனையவர்களின் ஒன்றிணைந்த மேடை அலை அசைவுகளும் இரண்டு மணித்தியாலத்தில் அதிர்வுகளாய் 17 ஆம் நூற்றாண்டு யதார்த்த புருசோத்தமன் யோசவ் வாஸை யாழ்ப்பாண இருளுக்குள்ளே பளிச்சென்று பிரகாசிக்க வைத்தன.

யாழ்ப்பாண பனையோலை அரணுக்குள் ஒல்லாந்த சிப்பாய்களின் ஆடலும் துள்ளலும் துவக்கு ஏந்திய நடை ஒலியும், அவர்கள் மேடை முகங்களும் இடையிடையே வந்த பறைமேள அறிவிப்பும் நல்ல எதிரிடை ஓசைகளை எழுப்பின.

வான்றீட்டின் எதிரிடைக் கர்ஜனைகளும் அவன் காவலர்களின் மௌன ஒலிகளும், கத்தோலிக்க ஆண் பெண் கதறலுடன் (பெண்கள் விஞ்சுகின்றனர்) எதிரொலிக்க, ஆன்மாவின் இருள் ஒளி விசுவாச கான்த்தை தத்துருவமாக்கு கின்றது.

சில்லாலைத் திருப்பலிக் காட்சிகள் இன்றைய அவ விசுவாச இருள் பயணத்தினையும் ஆடம்பரத் திருப்பலி விழாக்களையும் சீண்டுகின்றது.

யூட்தாஸ் என்ற நாமம் யூதாஸ் என்ற பாணியில் பல்லவியாக ஒலிக்கின்றது. கிறிஸ்மஸ்சின் மூன்று இரவுப்பூசைகள் வரலாற்று யதார்த்தம் என்பதை விட நல்லதொரு நாடக அனுகவியலாகின்றது. அளவெட்டி இளவாலை, சில்லாலை முக்கோணம் (காங்கேசன்துறை, நகுலேஸ்வரம், மாவிட்டபுரம்) ஆதி சைவ அடித் தளங்கள் போன்று அமைந்துள்ளது.



சில்லாலையை விட்டு வெளியேறல் கால் நடை, அறுபதுகளில் மேடையேற்றப்பட்ட ஹென்றி ஹெயசேனாவின் 'குணுவெட்ட கத்தாவ' என்ற நாடகத்தில் வேலைக்காரி குருசாவின் நடை பாதையைப் பார்த்தது போன்ற முறைமை நாடகத்திற்கு மிகவும் அழகாக அமைகின்றது.

ஒட்டு மொத்தமாக (கண்டியைப்பற்றிய பின் காட்சி ஒட்டல் தேவையற்றது. அவசர சேர்ப்பு போன்று உள்ளது.) தெய்வீக அமைப்பாக்கங்களின்றியே மலை போன்ற சாதனைகளை இரண்டரை வருட யாழ்பாண மறைபரப்புப்பணியில் சாதித்து விடுகின்றார் வாஸ். அதனை நாடகம் மிகவும் சிறப்பாக வெளிக்கொணர்ந்து விடுகின்றது.

ஆனால் இடப்பக்கக் குரல்கள் போன்று பார்வையாளர்கள் பக்கத்தின் இடது பக்க மூலையில் இருந்த இளம் சிறுவர் பழைய பாணியிலேயே நாடகத்தைப் பார்வையிட்டனர். நம் சினிமா கலாசாரம் மேடையைப் பிரிப்பது போன்று வில்லன் வீரன் பக்கம் சார்ந்தே வான் றீட் கம்பனியையும் அவர்கள் வீழ்ச்சிகளையும் அவர்கள் தீர்ப்பிட்டுக் கரகோசம் செய்தனர்.

அரிஸ்ரோட்டிலின் துன்பியல் நாடகங்களில் ஏற்படும் கதாசிஸ் இதய மாற்றம் Carthaisi ஏற்பட அவர்கள் இடம் வைக்கவில்லை, அவர்கள், கால் பந்து, கிறிக்கற், வெற்றி எழுச்சிப் பட்டாசுகளில் அவர் வாழ்வு சுருக்கமாகி அடங்கி விடுவது போன்று, கத்தோலிக் கமும் மறையாது இருக்கட்டும்


அருட்பணி J.E.ஜெயசீலன்

# ஒற்றை ரோஜாக்கள்

சிறுகதை

ஞானேஸ்வரி

“இறையாட்சியின்
பொருட்டு வீட்டையோ
மனைவியையோ
சகோதரர்
சகோதரிகளையோ பெற்றோரையோ
பிள்ளைகளையோ
விட்டு விட்டவர் எவரும் இம்மையில்
பன்மடங்கும் மறுமையில்
நிலைவாழ்வும் பெறாமல் போகார்.
(லூக்: 18: 29-30)



பஸ்ஸினுள் வசதியான இருக்கையில் தங்கையை உட்கார வைத்து விட்டு, பாசத்துடன் அவள் தலையைத் தடவிய படி சிறிது நேரம் நின்ற அண்ணாவை நிமிர்ந்து பார்த்த அமலாவுக்கு அழுகை பொத்துக் கொண்டு வந்தது. மளமள வென்று கண்கள் நீரால் நிறைந்தன. துடித்துப் போன அண்ணன் “ அழா தம்மா.... அம்மாவை நான் ஒரு குறையுமில்லாமல் பார்த்துக் கொள் வன். எல்லாரையும் கூட்டிக்கொண்டு இடையில வருவன்....... என்ன பிரச்சினையெண்டாலும் மறைக்காமல் என்னோட கதை. என்ன வேணுமோ அண்ணாவுக்கு ஒரு போன் பண்ணு. நான் உடனே வருவன்” என்று தன் துக்கத்தை மறைத்து தங்கையை ஆறுதல்படுத்தியவரின் கரங்களை தங்கை ஆறுதலாகப் பற்றினாள். பற்றிய அந்தக் கரங்களுக்குள் பயணச்சீட்டை யும், அவளுடைய செலவுக்காக கொஞ் சம் பணத்தையும் திணித்து விட்டு கண் களைத் துடைத்தபடி இறங்கிச் சென்ற மூத்த சகோதரனையும், அவளையே பார்த்தபடி வெளியில் நின்ற குடும்பத்த வரையும் ஜன்னல் வழியாகப் பார்த்த போது நெஞ்சம் துக்கத்தால் நிறைந்தது. வேண்டாம் இந்த வாழ்க்கை எல்லாவற் றையும் தூக்கி எறிந்து விட்டு அம்மா வின் மடியே தஞ்சம் என்று திரும்பிப் போய் விடலாம் என்று கூட மனம் நினைத்தது.

அந்த அளவுக்கு அவளைப் பிரிவுத் துயர் வாட்டியது. “மீண்டும் இந்த அம்மாவைப் பார்க்க எப்போ வருவாய் என் மகளே?... என்ற அம்மாவின் ஏக்கப் பார்வை... இவ்வளவு நாளும் தங்களோடு ஓடிப் பிடித்து விளையாடிய அத்தை திடீரெனப் புறப்பட்டு விட்ட அதிர்ச்சி விலகாத அண்ணன் குழந்தைகளின் ஏக்க முகங்கள்.... தம்பி, தங்கைகளின் நீர் வழியும் கண்கள்....... அண்ணியின் அன்பு முகம்...... அத்தனை முகங் களையும்மீண்டும் ஒருதடவைபார்த்து தன் உள் மனதுக்குள் புதைத்துக் கொண்டவள் நெஞ்சைப் பிழியும் சோகத்துடன் அவர்களைப் பார்த்து கையசைத்து விட்டு மனம் ஓலமிட்டு அழ தன் இருக்கையில் சாய்ந்தாள். பஸ்ஸினுள்ளே அந்நியமாகத் தெரிந்த முகங்களைப் பார்க்கப் பிடிக்காமல் மீண்டும் கழுத்தை வளைத்துத் திரும்பி புள்ளியாகத் தெரியும் தன் குடும்பத்தவரைக் கண்கள் நிறைய அள்ளிக் கொண்டாள்.

பத்து நாள் லீவும் ஓடிப் போனதே தெரியவில்லை. சந்தோச நாட்கள் இறக்கை கட்டிக்கொண்டு பறந்து விடுகின்றன. துக்கமும் வேத னையும் நிறைந்த நாட்கள் நத்தை வேகத்தில் நகர்கின்றன. அவளுக்குத் திரும்பிச் செல்லவே மனசில்லை. வீட்டில் குடும்பத்தவரோடு இருக்கவே மனம் துடித்தது. என்ன வாழ்வு என்று வெறுப்பும் விரக்தியும் ஏற்பட்டதைத் தடுக்கவும் முடியவில்லை.

அவளுக்குப் பிடித்தவற் றையே பார்த்துப் பார்த்து சமைத்து, தரையில் எல்லோரும் வட்டமாக உட்கார்ந்து பேசிச் சிரித்தபடி சாப்பிடு வதும்.... ஒவ்வொருவரும் அவளுக்கு ஊட்டி விடுவதும்...... எவ்வளவு சந் தோசங்கள். இஷ்டப்படி தூங்கி எழுந்து, குழந்தைகளோடு ஓடிப் பிடித்து விளையாடி..... தாமதமாகக் குளித்து, சாப்பிட்டு........ எந்தக் கட்டுப்பாடும் இல்லாத சந்தோச நாட்கள்... மற்றவர்கள் ஏதும் சொல்வார்களோ திட்டுவார்களோ என்று அச்சப்படத் தேவையில்லாத நாட்கள்..... இனி அடுத்த விடுமுறை வரும்வரையில் காத்திருக்க வேண்டும்.... ம்...ம்... பெருமூச்சு வெளிப்பட்டது.

அவளைப் போல்தான் இம் முறை அவளது தோழிகளில் சிலரும் விடுமுறைக்காக அவர்களது வீடுக ளுக்குச் சென்றிருந்தனர். சிலர் மகிழ்ச் சியாக வருவர். சிலர் துக்கத்துடனும் சொல்ல முடியாத வேதனைகளுடனும் வருவர். சில சந்தர்ப்பங்களில் இவர்கள் சென்று இறங்கியதும் குடும்பப் பிரச் சினைகள் வந்து சூழ்ந்து கொள்வ தும் உண்டு. என்ன செய்வது... எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டு தானே வாழவேண்டும் லீவு முடிந்து பணிக்குத் திரும்புபவர்கள் அதிலும் இள வயதினர் திரும்பிய பின் யாருடனும் பேசவே பிடிக்காமல் விட்டத்தை வெறித்துக் கொண்டு உட் கார்ந்து விடுவதும் உண்டு. அவர்கள் மன நிலையைப் புரிந்து கொண்டு உள்ளங்களை ஆற்றுப்படுத்துபவர்கள் அங்கு இருந்தாலும் அனல் போன்ற வார்த்தைகளைக் கொட்டி வெந்த உள்ளத்தை வேதனைப்படுத்துபவர்க ளும் அங்குதான் இருந்தார்கள்.

நீண்ட பயணமும், குடும்பத்தவரைப் பிரிந்த துக்கமும் களைப்பைத் தர அப்படியே கண்ணயர்ந்து விட்ட அமலாவின் காதுகளில் “அடுத்தது பள்ளிக்கூடச் சந்தி... இறங்கிற ஆட்கள் ஆயத்தமாய் இருங்கோ....” என்ற குரல் அசரீரியாய்க் கேட்க.... திடுக் என்று விழிப்பு வந்தது. இனம் புரியாத பரபரப்பு அவளுக்குள் தொற்றிக் கொண்டது. அம்மா அவளுக்குப் பிடிக் குமே என்று ஆசைஆசையாகச் செய்து தந்திருந்த தின்பண்டங்கள் நிறைந்த பையையும், தன்னுடைய பயணப் பொதிகளையும் எடுத்து இறங்குவதற்கு ஆயத்தமாகத் தன்னருகே வைத்துக் கொண்டாள்.

இப்போது அவளது உள்ளத்தில் அவளது பணிகளும், கடமைகளும் விரிந்து பரந்தன. மனதுக்குள்ளேயே அவள் ஆற்ற வேண்டிய வேலைக ளைப் பட்டியலிட்டுக் கொண்டாள். எல் லாவற்றையும் நல்லபடியாகச் செய்து முடிக்க வேண்டுமே என்ற கவலை பிறந்தது. அவற்றை நினைக்க நினைக்க இருப்புக் கொள்ளவில்லை.

பஸ் ஊர்ந்து செல்வது போல் தோன் றியது. குடும்பத்தவர் ஒவ்வொருவரின் முகங்களையும் நினைத்துப் பார்த் தாள். கவலையாக இருந்தது. ஆனா லும், பிரிவு வேதனையையும் நேச முகங்களையும் அப்படியே தன் இதயத்தின் ஒரு மூலையில் பொதிந்து வைத்தாள். அந்த வலியும் வேதனை யும் எப்போதும் இருந்து கொண்டு தான் இருக்கும்.

அவள் மிகவும் விரும்பி தன் வாழ்வை யாருக்கு அர்ப்பணித்தாளோ அவரை இப்போது நினைத்துப் பார்த் தாள். அவரை நினைத்ததும் மெல்ல மெல்ல அவள் உள்ளம் இயல்பு நிலைக்குத் திரும்பியது. மகிழ்ச்சி பொங்கியது. இந்தப் பிரிவுகளும் வேத னைகளும் தனக்கு மட்டும் இல்லை. எல்லோருக்கும் பொதுவானது என்ற எண்ணம் வந்தது. தன் உணர்வு களை அடக்க முடியாமல் அழுதது வெட்கமாக இருந்தது. யாரும் பார்த் திருப்பார்களோ என்று ஒரு முறை சுற்றிவரப் பார்த்துக் கொண்டாள்.

இறங்க வேண்டிய இடம் நெருங்க நெருங்க அவளது பொறுப் பும் கடமையும் அவள் முன்னே பூதாகரமாக விரிந்து கொண்டே வந் தன. மனதுக்குள் ஒரு திடம் ஏற்பட்டது. ஒரு சாதாரணப் பெண்ணாகப் பய ணம் முழுதும் அழுது கொண்டு வந்தது வெட்கமாக இருந்தது. “பள்ளிக் கூடச் சந்தி இறங்குங்கோ....” என்ற குரலைத் தொடர்ந்து பஸ் தரிப்பிடத் தில் நிற்க சிலர் அவசரப்பட்டு இறங்கி னர்..... சிலர் இடித்துக் கொண்டு முன்னே சென்றனர்.

அவர்கள் பின்னே நிதானத்துடன் கைகளில் பயணப் பொதிகளையும், நெஞ்சில் தான் ஆற்ற வேண்டிய பணிகளின் கனத்தையும், தன் வாழ்வு யாருக்காக அர்ப்பணிக்கப்பட்டதோ அவ ரையும் சுமந்து கொண்டு அந்த பஸ்ஸிலிருந்து கம்பீரமாக இறங்கி தன் இல்லத்தை நோக்கி நடந்தார் அருட்சகோதரி அமலா.



உரும்பிராய் தூய மிக்கேல் ஆலயப் பங்கின் சிறார்களான 27 பேருக்கு முதன்நன்மை அருட்சாதனம் 25.06.2017 அன்று பங்குத்தந்தை அருட்பணி ம.பத்திநாதர் அவர்களால் வழங்கப்பட்டது.

# நாம் வாழும் சூழல் குப்பைமேடாக மாறுவதைத் தவிர்ப்போம்

நாம்வாழும்சூழல் எம்முடன்முடிவடைந்து போகும். இயற்கை வளமன்று எமக்கு பின்வரும் எமது உறவுகள் எமது எதிர் கால சந்ததியினர் வாழவேண்டிய பூர் வீக சொந்தமாக நாம்விட்டுச் செல் லும் இயற்கை வளமாகும். இதனை தூய தாக, தீங்கற்றதாக பலனுள்ளதாக எம் இளம் சந்ததியினர் வாழக்கூ... விட்டுச் செல்வது எம் ஒவ்வொ தும் பாரிய பொறுப்பாகும்.

**ஏன் கிராமப்புறங்களை நகர்ப்புறங்களில் குப்பை கள் தேக்கமடைகின்றது?**

கிராமப்புற மக்கள் லௌவீக விஞ்ஞான தொழி னுட்ப, சொகுசு வாழ்க்கையை விரும்பி, நகர்ப்புறத்திற்கு தமது இருப்பிடங்களை மாற் றிக் கொண்டதுடன், விவசாய பயிர்ச்செய்கை முறைகளைக் கைவிட்டு நகர வாழ்க்கை முறைக்குத் தம்மை இசை வாக்கிக் கொண்டனர். இத னால் நகர்ப்புறத்தில் இட நெருக்கடி ஏற்பட்டதுடன், சன நெருக்கடியும் தோன்றி இயற்கை வீட்டுக் கழிவுகளை, உக்கும் கழிவு களைக்கூட புதைக்க இடமில்லாத நிலை தோன்றியது.

இதனால் ஒவ்வொரு வீட்டின் முற்பகுதியிலும் குப்பைகள் அன்றாடம் சேர்க்கப்பட்டு பொதியாக்கப்பட அவை நகர சுத்திகரிப்புத் தொழிலாளர்களால் தினமும் அகற்றப்படுகிறது.

இத்தொழிலாளர்கள் வருகை தராத தினங்களில் குப்பைகள் வீதிகளில் பரப்பப்பட்டு துர்நாற்றம் வீசுவதுடன் மக்களுக்கு அசௌகரியங் களையும் ஏற்படுத்துகிறது.

**இன்று பொது இடங்களில் ஏன் நீலம், பச்சை, கறுப்பு, மஞ்சள் சிவப்பு நிற குப்பை போடும் பீப்பாக்கள் வைக்கப்பட்டுள்ளன?**

**நீலம் :** மீளவும் சுழற்சிக்குட்படுத்தப் பட்டு பயன்படுத்தக்கூடிய கழிவுகள்

உ+தா: பேப்பர், காட்போட் பெட்டிகள், பிளாஸ்ரிக், செம்பு, உருக்கு, தகரப் போத்தல்கள், கண்ணாடிப் போத்தல்கள் பொலித்தீன், இறப்பர்ப் பொருட்கள், PVC குழாய்கள்.

**பச்சை :** உக்கும் கழிவுகள், இயற்கை யான வீட்டுத் தோட்டக் கழிவுகள்.

உ+தா: மரக்கறி, பழங்கள், சமையல் கழிவுகள், தேயிலை, கோப்பி, துணி வகைகள், தாவர மீதி கள், விலங்குகளின் கழிவுகள், பயன் படுத்தப்பட்ட கைதுடைப்புக் கடதாசிகள்.

**கறுப்பு :** மீள் சுழற்சிக்குட்படுத்த முடியாத கழிவுகள்

உ+தா: ரெஜிபோம் பொதியுறை கள், சிகரெட் மீதிகள், சாம்பல் மீதிகள், வைத்தியசாலைக் கழிவுகள், e கழிவுகள் (CD, DVD, TV, ரெலிபோன், கணனி, ரேடியோ, சலவை இயந்திரம், மின்குமிழ், ஆளி, திரான்ஸ் போமர், டபோட்டுக்கள், கைபேசிகள், பற்றரிகள்.

இதனை விட சில இடங்களில் பின்வருமாறு பயன்படுகின்றது.

**சிவப்பு: உலோகப் பொருட்கள்**
**மஞ்சள்: பிளாஸ்ரிக் பொருட்கள்**
**பச்சை : கண்ணாடிப் பொருட்கள்**
**நீலம் : உக்கும் பொருட்கள்**

இவ்வாறு கழிவுப்பொருட்கள் பிரிக்கப்படுவதற்குக் காரணம் உக்கும் கழிவுகள் மண்ணுடன் சேர்ந்து பசளையாகின்றது. அத்துடன் மீள் சுழற்சிக்குட்படும் கழிவுகள் சில நுட்ப முறைகள் மூலம் மீளவும் பயன்படுத்தக்கூடிய வகையில் மாற்றப் படுகிறது.

ஆனால் மீள் சுழற்சிக்கு உட் படாத கழிவுகள் மனிதனுக்கும் சூழலுக் கும் ஆபத்தானவை. இவற்றில் பாத ரசம், கட்மியம், புரோமின் போன்ற இரசாயன பார உலோகங்கள் காணப் 



பட்டு அங்கிகளின் உணவுச் சங் கிலியூடு கடத்தப்பட்டு புற்றுநோய் களைத் தோற்றுவிக்கக்கூடியவை. இதனால் கறுப்புப் பீப்பாக்களில் சேக ரிக்கும் கழிவுகள் உரிய முறையில் அகற்றப்படவேண்டும்.

இம்முறையில் 3R என்னும் கழிவு அகற்றல் முகாமைத்துவத்தைப் பயன்படுத்தி அகற்றப்படவே இந்த முறை பயன்படுகின்றது.

1) Reust - மீளவும் பயன்படுத்தல்
2) Recycle - மீள் சுழற்சிக்குட்படுத்தல்
3) Riduce - பாவனையைக் குறைத்தல்

**மீள் சுழற்சிக்கு உட்படாத கழி வுகளை எவ்வாறு அகற்றலாம்?**

770-970°C வெப்பநிலைக்கு சாம்ப ராக்கம் ) Incinenation) செய்யும் போது சாம்பல், கண்ணாடி, உலோ கம் என்பன மீதமாகக் கிடைக்கும். வைத்தியசாலைத் திண்மக் கழிவுகள் இவ்விதமே எப்பொழுதும் சாம்பராக் கும் செய்யப்படவேண்டும்.

**பொலித்தீன் பாவனையை ஏன் குறைக்க வேண்டும்?**

பொலித்தீன் பைகள், மசகு எண்ணெய் வடிகட்டலின் போது கிடைக்கும் ஒரு விளைவிலிருந்தே தயாரிக்கப்படுகிறது. இப்பைகள் இலகு வில் உக்குவதில்லை. இவற்றை மீள் சுழற்சிக்கு உட்படுத்த முடியுமெனினும் சில நடைமுறைச் சிக்கல்கள், வர்த்தக ரீதியான இலாபமின்மை என்பன காரணமாக மீள் சுழற்சி முறைகள் முழுமையாக வெற்றியளிக்கவில்லை.

இதனால் சூழலில் வீசப்படும் பொலித்தீன் பைகள் நகரங்களில் க ழிவு நீர்க்கால்வாய்களை அடைத்து நீர் தேங்கச் செய்வதுடன், நுளம்புப் பெருக்கத்தைக் கூட்டுகிறது. சமுத்திர, நீர் நிலை வாழ் உயிரினங்களைப் பாதிக்கின்றன. கால்நடைகளின் உண வுக் கால்வாய்களினூடு சென்ற அவற்றை இறக்கச் செய்கிறது.

**பொலித்தீனுக்குப் பதிலாகப் பாவிக்கக்கூடிய பொருட்கள் எவை?**

பனையோலை, பனைநார், வாழைத்தண்டு, நார், கமுகம் மடல்.

**இலங்கையில் பாவனையிலி ருக்கும் பொலித்தீன் சார் பொருட் களுக்கான தடை வடபகுதி மக்க ளுக்கு ஏன் நன்மை பயக்கும் விடய மாகிறது?**

வடபகுதியில் பனைமரங்கள் 6 மில்லியன் அளவில் காணப்படு கின்றது. இதனைப் பயன்படுத்தி தற் போது வழக்கிழந்து போகும் பனை சார் பொருட்களை உற்பத்தி செய்து உள்ளூர், வெளியூர் சந்தைகளில் அறிமுகம் செய்து சந்தைக் கேள்வியை அதிகரிக்கலாம். இதனால் வறுமைக் கோட்டுக்கு உட்பட்டவர்கள் தமது வருமானத்தை அதிகரித்துக்கொள்ள முடியும்.

**உக்கும், பிரித்தழியக்கூடிய பொருட்களைப் பாவிப்பதில் நாம் ஏன் அதிக அக்கறை காட்ட வேண்டும்?**

இதனால் கழிவுப்பொருட்கள் சூழலில்தேக்கமடையாது மண்ணோடு சேர்த்து பசளையாகி விடுகிறது. ஏனைய மீள் சூழற்சிக்குட்படும், மீள் சூழற்சிக்குட்படாத கழிவுகள் யாவும் வெப்பமேற்றப்பட்டே வேறு பொருட்க ளாகவோ அல்லது அமைப்பழிவுக்கோ உட்படுகின்றன.

இதனால் எமது சூழலின் வெப்பநிலை அதிகரிப்பதுடன் $CO_2$, CO, $SO_2$, $NO_2$, $H_2O_{(Y)}$ (நீராவி போன்ற வாயுக்கள் வளிமண்டலத்தில் சேருகின்றன.

இவ்வாயுக்கள் எமது வளி மண்டலத்தில் காணப்படுகையில் பூகோள வெப்பமாதல், அமில மழை, ஒளி இரசாயனப் புகார் (Photo chemical Smog) என்னும் விளைவு ஏற்படுகிறது. $CO_2$, $CH_4$ (மெதேன் வாயு) $H_2O_{(Y)}$ $N_2O$, $SO_2$ என்பவை பச்சை வீட்டு வாயுக்களாகும்.

**பச்சை வீட்டு வாயுக்கள் புவியில் அதி கரிக்கும் போது எவ்வாறு புவியின் வெப்பநிலை அதிகரிக்கின்றது?**

$CO_2$, $CH_4$, $N_2O$, $O_3$ (ஓசோன் வாயு), $CO_2$ போன்ற வாயுக்கள் புவியை நோக்கி வரும் சூரியக்கதிர்களை அகத்துறிஞ்சி மீண் டும் பூமியை நோக்கி செலுத்துவதால் உருவாகும் சமநிலை புவியில் வெப்ப நிலையை மாறாது பேணுவதுடன், உயிரினங்கள் வாழக்கூடிய சூழலை யும் வழங்குகிறது. இதுவே பச்சை வீட்டு விளைவு எனப்படும்.

ஆயினும், இவ்வாயுக்கள் கூடுதலாக அதிகரிக்கும் போது புவியி னதும், வளிமண்டலத்தினதும் வெப்ப நிலை அதிகரித்தல் பூகோள வெப்ப மாதல் ஆகும். இதில் கூடிய பங்கு வகிப்பது $CO_2$, $NO_2$, $CH_4$, CFC (குளோரோ புளோரோகாபன் - குளிரூட்டிகளில்பயன்படுகிறது)என்பன வாகும்.

**$CH_4$ (மெதேன் வாயு) என்பாறு சூழலில சேருகிறது?**

விலங்கு வேளாண்மையி லிருந்து விலங்குகளின் கழிவுகள் பற்றீரியா தாக்கத்தினால் பிரிகையடை யும் போது இவ்வாயு உருவாகிறது. ஆயினும் அவற்றைச் சேகரித்து சமையல் எரிபொருள் வாயுவாகப்பயன் படுத்தும்போது நன்மை கிடைக்கிறது.

**$CO_2$ (காபனீரொட்சைட்டின்) வாயு வின் அளவை எவ்வாறு சூழலில் குறைக்கலாம்?**

ஐதரோகாபன் கொண்ட பெற் றோலிய எரிபொருட்களினால் இயங் கும் மோட்டார் வாகனங்களே இவ் வாறு $CO_2$ வாயுவை அதிகளவில் வெளியேற்றுகிறது. இதற்குப் பதிலாக மின்மோட்டார் வாகனங்கள், சூரிய ஒளியில் இயங்கும் வாகனங்கள் பயன்படுத்தினால் $CO_2$ வாயு வெளி யேற்றத்தைக் குறைக்கும்.மாற்றீட்டு முறையாகும். பெற்றோலிய எரிபொருட் களுக்குப் பதிலாக காற்றுசக்தி, கருச் சக்தி என்பவற்றையும் பயன்படுத்தலாம்.

அத்துடன், மோட்டார் வாகனங் களின் எரிபொருள் தகனம் தகுந்த முறையில் சோதனையிடப்படல் மூல மும் இப்பிரச்சினையை குறைக்கலாம்.

**வாகன எரிபொருட்களின் குறைதக னத்தில் CO(காபனீர் ஒட்சைட்டு, $NO_2$ (ஐநதரசனீரொட்சைட், காப னோர் ஒட்சைட் போன்ற வாயுக்கள் வெளியேறுகின்றன. இதனை எவ் வாறு குறைக்கலாம்?**

அதிகளவு ஐதரோ காபன் கொண்ட எரிபொருள் (Rich Mixture) உயர் செறிவில் CO ஐ வெளியேற்றும். குறைந்தளவு ஐதரோ காபன் கொண்ட எரிபொருள் (Lean Mixture) குறைந்த ளவு CO வையும் அதிக $NO_2$ வையும் வெளியேற்றும்.

வாகனங்களுக்கு நாம் பயன் படுத்தும் எரிபொருட்களில் வளி, எரி பொருள் விகிதம் சரியாகப் பேணப்படு கிறதா எனக் கவனித்தல் வேண்டும். செம்மைப்படுத்தல் மூலம் அல்லது உளக்கி மாற்றிகளைப் பயன்படுத்து வதன் மூலம் CO, $NO_2$ போன்ற குறைதகன விளைவுகள் வருவதைக் குறைக்க முடியும்.

இவ்வாறு நாம் வாழும் சூழ லில் கழிவுப் பொருட்கள் தேங்காமலும், சூழலை மாசுபடுத்தும் வாயுக்கள் வெளி வருவதை கட்டுப்படுத்தலிலும் கவனம் செலுத்துவோமாயின் எமது சூழல் வெப்பம் அதிகரித்தல், சூழல் மாசடைதல், காலநிலை மாற்றங்கள், வறட்சி, வெள்ளப்பெருக்கு, ஓசோன் படை சிதைவடைதல் என்பவற்றைத் தவிர்த்து அழகான அமைதியான எமது சூழலை உருவாக்கமுடியும்.

*அருட்சகோதரி :றோமலா அன்ரனி (HC)*

## திருமண வெள்ளி விழா வாழ்த்து

19.08.1992ல் திருமண பந்தத்தில் இணைந்து
19.08.2017 அன்று வெள்ளிவிழாக் காணும்

திரு. திருமதி ரவீந்திரன் கலிஸ்ரஸ் – அஜந்தா
தம்பதியினரை மனமுவந்து வாழ்த்துகிறோம்




AD67

எங்கள் குடும்பத்தின் இனிமையான தம்பதியினரே
திருமணபந்தத்தின் வெள்ளி விழாக் கதாநாயகர்களே
இல்லறம் எனும் நல்லறம் வாழ்ந்து காட்டும் நீவீர்
நலமுடனே வாழ வாழ்த்துகின்றோம்
உங்கள் பொன்னான வாழ்வுதனை உவந்தளிக்கும்
இறைவனுக்கு நன்றி கூறி என்றும் பல்லாண்டு நீடுழி
நீவீர் வாழ்க வாழ்கவெனவேவாழ்த்தி இறையருளை
வேண்டுகின்றோம்

அன்புடன் வாழ்த்தும்
திருமதி ஏ.எவ்.ஜே.ரூபசிங்கம்
திரு.திருமதி.குலேந்திரன் குடும்பம்
திரு.திருமதி.கஜிதரன் குடும்பம்.

---

### இல்லறவாழ்வின் 60வது ஆண்டு நிறைவில் வாழ்த்துகின்றோம்





**1957.08.30 – 2017.08.30**

### திரு.திருமதி. மரியதாஸ் கிருபைமலர் தம்பதிகள்

AD70

இருமனங்கள் அன்பாக இணைந்த
இல்லறமென்னும் நறுமணச்சோலையில்
இன்ப துன்பங்கள் சமமாய்ப் பகிர்ந்து
உறவுகள் எமக்காய் உரமாய் உழைத்து
ஆண்டுகள் 60 நிறைவுறும் இந்நாளில்
இல்லறப்பயணம் இனிதே தொடர
உடல் நலம் பெற்று வாழ
இறைவனுக்கு நன்றி கூறி மகிழ்வோடு
வாழ்த்துகின்றோம்

நெல்லியடி
கரவெட்டி

மகள் நிர்மலதாஸ் குடும்பம்
உற்றார், உறவினர்

---

### புதுக்குடியிருப்பு குழந்தை இயேசு புதிய ஆலயம் திறப்புவிழா



முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு குழந்தை இயேசு ஆலயம் எதிர்வரும் 19.08.2017 சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு யாழ். ஆயர் மேதகு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களால் ஆசீர்வதித்து, புனிதப்படுத்தப்பட்டுத் திறந்து வைக்கப்படும்.

### குருநகர் தூய யாகப்பர் மகளிர் மன்றத்தின் ஏற்பாட்டில் வினாவிடைப் போட்டி

ஆலயத் திருவிழாவை முன்னிட்டு நவநாட்காலங்களில் ஆற்றப்பட்ட மறையுரைகள் மற்றும் வாசகப் பகுதிகள் என்பவற்றிலிருந்து கொடுக்கப்பட்ட வினாவிடைப் போட்டியொன்றை மாணவர்களுக்கென மேற் படி மகளிர் மன்றம் ஒழுங்கு செய்திருந்தது.

மாணவர்களை ஆர்வத்தோடு மறையுரைகளைக் கேட்கவும் இறைவார்த்தைகளை வாசிக்கவும் உள்ளீர்க்கும் முகமாக மேற்படி போட்டி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

---

## கத்தோலிக்க மறையாசிரியர் சான்றிதழ் தேர்வு - 2017

கத்தோலிக்க மறைப் பாடசாலைகளில் பணியாற்றும் மறையாசிரியர்களுக்காக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் கத்தோலிக்க மறையாசிரியர் சான்றிதழ் தேர்வுக்கான விண்ணப்பப்படிவங்கள், இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நாட்டின் அனைத்து பங்குகளுக்கும்அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

மறைப்பாடசாலையின் முதல்வரான பங்குத் தந்தையினால் மட்டுமே இப்பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்கள் அனுப்பப்பட வேண்டும். தனிப்பட்ட ரீதியில் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியாது என்பதை அறியத் தருகிறோம்.

விண்ணப்பப்படிவங்கள் இது வரை கிடைக்கப்பெறாத அல்லது விண்ணப்பப்படிவங்கள் போதுமானதாக இல்லாத மறைப்பாடசாலை முதல்வர்கள், கீழ்காணும் முகவரிக்கு அலுவலக நேரங்களில் வந்து அல்லது தமது பங்கிற்குத்தேவையான விண்ணப்பதாரரின் எண்ணிக்கையைக் குறிப்பிட்டு தபால் மூலமாக அல்லது கீழ்காணும் தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ள முடியும். முகவரி:- பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு, வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த.பெ. 1503, கொழும்பு. தொலை பேசி எண். 011-2785230 - 011-2177075.

நிரப்பப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பங்கு ரீதியாக 24.08.2017 க்கு முன்னர் அனுப்பிவைக்கப்பட வேண்டும். இப்பரீட்சையானது கடந்த 2015 ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது

## இந்திய அருட்சகோதரிக்கு உலகளாவியர் விருது

AIDS நோயுற்றோரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு உதவும் வகையில் ஒரு சிறப்புப் பாடத்திட்டத்தை அமைத்துள்ள இந்திய அருட்சகோதரி ஒருவருக்கு உலகளாவியர் HIV நோயுற் றோர் பராமரிப்பு விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

இயேசு மரி யோசேப்பு சபையின் பெங்களூர் மாநிலத்தைச் சார்ந்த அருள்சகோதரி Lourdu Mary Nagothu அவர்கள் HIV மற்றும் AIDS நோயுற்றோரின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்கு அறிமுகப் படுத்தியுள்ள பாடத்திட்டத்திற்காக இவ்விருது வழங்கப்படுகிறது.

---

### 1ம் ஆண்டு பிரிவின் நிறைவில்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 18 - 04 - 1955 |  | 12 - 08 - 2016 |

அமரர்
### திருமதி கிறிஸ்ரின் தர்மசீலன்


ஆசிரியையாய் பலர்க்கு அறிவொளி தந்தவளே
அன்புத் துணைவனை அருகிருந்து பார்த்தவளே
உற்றார் உறவினர்க்கு உறுதுணையானவளே
சுற்றம் சொந்தம் எல்லாம் சுற்றிநின்று புலம்பி அழ
பற்றும் பாசமும் மறந்து ஏன் பறந்துவிட்டாய்
அம்மா என்றலறும் மகளை ஏன் மறந்தாய்
பேரக்குழந்தைகளின் கதறல் கேட்கிறதா?
நோயுற்றோருக்கெல்லாம் தாதியாய் இருந்தவளே
கொடு நோயின் பிடிக்குள்ளே அகப்பட்டதேன்
கிறிஸ்ரின் என்பதால் கிறிஸ்துவோடு இணைந்தாயோ
நினைப்போம் திடுக்கிடுவோம்
நினைவு வரும் வேளைகளில்.......

336/232 பேஸ் லைன் வீதி
கட்டுவ, நீர்கொழும்பு

பிரிவால் துயருறும்:
கணவன், மகள்,
மருமகன் பேரப்பிள்ளைகள்,
உற்றார் உறவினர்

---

### விண்ணக வாழ்வின் 4ம் ஆண்டு நினைவஞ்சலி

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 20 - 06 - 1938 |  | 15 - 08 - 2013 |

AD71

அமரர் .திருமதி
### மரியநாயகி ஆரோக்கியநாதர் (நாயகம்)

" உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே
என்னில் நம்பிக்கை கொள்பவர் இறப்பிலும் வாழ்வார் "
(யோவான் 11:25)

அன்பின் உறைவிடமே பாசத்தின் உருவமே
பண்பின் இருப்பிடமே குடும்பத்தின் குலவிளக்கே
காலச் சக்கரத்தின் நான்கு ஆண்டுகள்
பறந்தோடியும்-எம்
இதய ஓலங்கள் ஓயவில்லை அம்மா


பத்துத் திங்கள் எம்மைச்சுமந்து பாரினில் ஆளாக்கி
பாசத்தோடும் பரிவோடும் வளர்த்தெடுத்த அம்மா
உம் அன்பு எம்மை விட்டு மாறாதம்மா
உம் ஆன்மா இறை சந்நிதியில் சாந்தி பெறுவதாக

நிரந்தர முகவரி
பலாலி வடக்கு வயாவிளான்
தற்காலிக முகவரி
1ம் குறுக்குத்தெரு பருத்தித்துறை

பிரிவால் துயருறும்
கணவன்,பிள்ளைகள்
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்

---

### 3ம் ஆண்டு நினைவஞ்சலி

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 17 - 07 - 1962 |  | 22 - 08 - 2014 |

AD69

அமரர்
### அருளானந்தம் அமலதாஸ்

"சீவியத்தில் என்னை நேசித்தவர்களே
மரணத்திலும் மறவாதீர்கள் "

ஈர விழிகள் இன்னும் காயவில்லை
இதயத்தின் வேதனைகள் குறையவில்லை
நினைவிலோ நினைவுகளுடன்
இறைவனடி இணைந்து நீங்கள்
மூன்றாண்டு நிறைந்ததைய்யா
மறக்கமுடியவில்லை ஐயா எங்களால்
மாறவில்லை ஐயா உங்கள் நினைவுகள்
எங்கள் முகம் காண உங்களை அழைக்கின்றோம்
உம் பசி நலம் மறந்து தரணியிலே
எம்மையெல்லாம். தலை நிமிரச் செய்தீர்களே
உங்கள் ஆன்மா ஆண்டவரின் திருவடியில்
அமைதி பெற வேண்டுகின்றோம்

30 மண்பிட்டி நாவாந்துறை,
யாழ்ப்பாணம்

மனைவி, பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

---

### விண்ணக வாழ்வின் 1ம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 14 . 04 . 1985 |  | 19 . 08 . 2016 |

AD68

அமரர்
### செல்வன். றெஜிஸ் செல்வநாதன் மெறில் கிளின்ரன்

" இருள் சூழ்ந்த பள்ளத்தாக்குகளில் நான் நடக்க
நேர்ந்தாலும் அஞ்சேன்.ஏனெனில் நீர் என்னோடு இருக்கின்றீர் "
(சங் 22 : 14 )

ஓராண்டு மறைந்தாலும் அழியாது உமது நினைவுகள்
என்றென்றும் எங்கள் நெஞ்சத்தோடு வாழும் அன்புத்தெய்வமே
எம் கண்முன்னே வாழ்ந்தகாலம் கனவாகிப் போனாலும் உமது முகம்
அருகில் இருப்பது போல் எந்நாளும் உணர்கிறோம்

118 1/1 கடற்கரைத்தெரு
நீர் கொழும்பு
077-9929511 , 031-2231936
077-4412333

இவரின் பிரிவால் துயருறும்
அன்புத் தந்தை தாய், சகோதரன்
மைத்துனி உற்றார் உறவினர்
நண்பர்கள்

# திருப்பாலத்துவ சபையின் கடந்த கால இயக்குநர்கள், ஊக்குவிப்பாளர்களுக்கான கௌரவிப்பு விழா












தேசிய திருப்பாலத்துவ சபையில் தேசிய மட்டத்தில் மறை மாவட்ட ரீதியாகக் கடந்த காலத்தில் இயக்குநர்களாக, ஊக்குவிப்பாளர்களாகப் பணியாற்றியவர்களைக் கௌரவிக்கும் சிறப்பு நிகழ்வொன்று கடந்த ஆடி மாதம் 29 ஆம் திகதி மருதானை தூய சூசையப்பர் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கொழும்பு உயர் மறை மாவட்ட ஆயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் கலந்து கௌரவித்தார்.

இந் நிகழ்வில் யாழ். மறை மாவட்ட இயக்குநர் அருட்பணி S.A.றொஷான் அடிகளாரும், பங்குகளிலிருந்து ஊக்குவிப்பாளர்களும் கலந்து சிறப்பித்தனர். நிகழ்வின் படங்களை மேலே காணலாம்.

# புதிய பாடத்திட்ட செயலமர்வு

எதிர்வரும் 2018 ஆம் ஆண்டிலிருந்து தரம் - 9 இற்கு அறிமுகப் படுத்தப்படவுள்ள புதிய பாடத்திட்டங்களுக்கமைவான கத்தோலிக்க திருமறைப் பாடத்திற்குரிய செயலமர்வு, தேசிய கல்வி நிறுவக கத்தோலிக்கபாட இணைப்பாளர்களினால் யாழ். மறைக் கல்வி நடுநிலையத்தில் 28, 29, - 07.2017 ஆகிய தினங்களில் நடாத்தப்பட்டது.

வடமாகாண கல்வி வலயங்களுக்கு உட்பட்ட பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்களில் குறிப்பிடப்பட்ட தொகையினரும், ஆசிரிய ஆலோசகர்களும் இச் செயலமர்வில் பங்கேற்றனர்.

தரம் 9 இல் கற்பிக்கப்படவுள்ள பாடத்திட்டக் கையேடு வழங்கப்பட்டு அவற்றில் உள்ளடக்கப்பட்ட தேர்ச்சிகளின் விளக்கங்களும், செயற்பாட்டுக் கற்பித்தல் முறைகளும், தெளிவுபடுத்தப்பட்டதுடன், ஆசிரியர்கள்,மாணவர்களிடையே நிலவவேண்டிய உளநல உறவாடல் எவ்வாறு அமைய வேண்டும் எனவும், அதன் வழியாக மாணவர்களின் உடல், உள, சமூகப் பிரச்சினைகளை இனங்கண்டு, சரியான கற்பித்தலை மேற்கொள்வதன் ஊடாகவே சிறந்த பெறுபேறுகளையும், ஒழுக்க விழுமியங்களையும் அவர்களிடத்தில் உருவாக்க முடியும் எனவும் விரிவுரைகள், செயற்பாடுகள் மூலம் சிறப்பாக எடுத்துரைக்கப்பட்டது.

இச் செயலமர்வின் இயக்குநர்களாக அருட்பணி எஸ்.அன்ரனி பொன்சியன் (அமதி), அருட்பணி பிரதீப்குமார் ஆகியோரும் வளவாளர்களாக திருமதி மேரி அனபல், அருட்பணி றமேஸ் (அமதி), திருமதி மல்லிகா, அரியதாஸ், திருமதி விக்ரோறியா, எல்விஸ் பிறஸ்கி (I.S.A யாழ் வலயம்) ஆகியோர் பங்கேற்று வழிநடத்தினார்கள்.

## இறை யேசுவின் பணிக்குருத்துவத்தில் இணைந்திட ஓர் அழைப்பு

**"வந்து பாருங்கள்" நிகழ்வு புனித மடுத்தினார் குருமடத்தில் எதிர்வரும் புரட்டாதி மாதம் 03, 04, 05 ஆம் திகதிகளில் எம் மண்ணின் விசுவாசத்தின் தந்தையும், இலங்கையின் அப்போஸ்தலருமான புனித ஜோசவ் வாஸ் வழியில் இறை யேசுவின் பணிக்குருத்துவத்தில் இணைந்திட ஓர் அழைப்பு.**

ஆன்மீக தாகம் கொண்ட ஒழுக்கத்தில் கல்வியில் சிறந்த, உலக திருச்சபைக்கும், யாழ். மறைமாவட்டத்துக்கும் எல்லாவற்றுக்கும் மேலாக இறைவனுக்கும் சொந்தமாகி, எல்லா மக்களுக்கும், அர்ப்பணிப்புடன் குருத்துவப் பணி செய்யக்கூடிய மாணவர்களுக்கான மூன்று நாள் வதிவிட "வந்து பாருங்கள்" நிகழ்வு புரட்டாதி மாதம் 03, 04, 05 ஆம் திகதிகளில் (ஞாயிறு, திங்கள், செவ்வாய்) புனித மடுத்தீனார் குருமடத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மறைமாவட்டக் குருக்கள் ஊடாக உங்கள் விபரங்களை அனுப்பி வைப்பவர்கள் இந்த நிகழ்வில் பங்கெடுக்க அழைப்புப் பெற்று இருக்கின்றார்கள். இறை இயேசுவின் பணிக்குருத்துவத்தில் இணைந்து குருவாக வர விரும்புகின்றவர்கள் உங்கள் விபரங்களைப் பங்குத்தந்தையர்கள் ஊடாக இன்னும் அனுப்பி வைக்கவில்லை என்றால் இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னதாக உங்கள் விபரங்களை (அருட்திரு ச.யோ.க.பாஸ்கரன் அதிபர், புனித மடுத்தினார் குருமடம், யாழ்ப்பாணம்.) அனுப்பி வைக்கவும்.



யூலனூர் தூய ஹென்றி அரசர் ஆலயத்தில் சிறார்களான 08 பேருக்கு முதன்நன்மை அருட்சாதனம் 09.07.2017 அன்று பங்குத்தந்தை அருட்பணி ம.பத்திநாதர் அவர்களார் வழங்கப்பட்டது.

## செபத்தின் ஆழத்திற்கு மக்களை அழைத்துச் செல்ல பங்குகளில் அன்பியங்களை உருவாங்குங்கள்

**அப்போஸ்தலிக்க மாகாணத் தலைவி அருட்சகோதரி மேரி றூபிக்கா**



கார்மேல் அன்னையின் பெருவிழாவில் யாழ். அப்போஸ்தலிக்க கார்மேல் சபையின் துணை அங்கத்தவர் ஒன்றுகூடல்ஒன்றுகடந்தயூன்19,2017அன்று கோவில் வீதி, அப்போஸ்தலிக்க கார்மேல்கன்னியர்மடத்தில்நடைபெற்றது.

கன்னியர்மட குழுமத் தலைவி அருட்சகோதரி ஜொம்ஸ் மாறி தலைமையில் நடைபெற்ற இவ் ஒன்றுகூடலில் அப்போஸ்தலிக்க கார்மேல் சபையின் மாகாணத் தலைவி அருட்சகோதரி மேரி லூமிக்கா பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய அருட்சகோதரி மேரி லூமிக்கா விஞ்ஞான உலகமயமாதலில் மூழ்கி அழிவின் பாதையில் முன்னேறும் நாம் ஆன்மீகத்தைத் தொலைத்து நிற்கின்றோம் எனவும், இளைய தலைமுறையினருக்கு இயேசு அனுபவத்தைக்கொடுத்து செப வாழ்வில் நிலைத்து வாழ பங்குகளில்அன்பியங்களைஉருவாக்குங்கள் என துணை அங்கத்தவர்களிடம் வேண்டினார்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம், 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2017 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.